பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா
5-00

சங்: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 18 புதன்கிழமை (02 - 08 - 2000) VALAMPURI ஒலி: 226

★ அரசியல் அமைப்பு சீர்திருத்த யாப்பு

# உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு ஜனாதிபதி நேற்று அனுப்பிவைத்தார்

## இன்று முடிவு வரும்

(கொழும்பு அலுவலக நிருபர்)

நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவிருக்கும் அரசியல் அமைப்பு சீர்திருத்த யோசனைகள் அடங்கிய சட்ட நகல் உயர் நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

அரசியல் அமைப்பின் பிரகாரம் உயர்நீதிமன்றம் இது தொடர்பாக ஆராய்ந்து 24 மணிநேரத்துக்குள் ஜனாதிபதிக்கும் பாராளுமன்ற சபாநாயகருக்கும் அந்த தீர்மானத்தை அறிவிக்கும்.

அரசியல் யாப்பின் 122 (அ)பிரிவின் பிரகாரம் உயர் நீதிமன்றத்திற்கு இத்தகைய யோசனைகளை ஜனாதிபதி விடுப்பது அவசியமாகும், இதன் அடிப்படையின் புதிய அரசியல் யாப்பின் பிரதிகளும் உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பின் 123 "இ" பிரிவின் அடிப்படை

(8 ஆம் பக்கம்பார்க்க)

## உத்தேச அரசியல் நகலை ஆதரிப்பதா? இல்லையா?

### தமிழ் கட்சித் தலைவர்கள் திரிசங்கு நிலையில்

(கொழும்பு)

நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட விருக்கும் உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்த நகல்வரைவு தமிழ்க்கட்சிகள் எவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

தமிழ்க்கட்சிக்கு தீர்வுத் திட்டம் கிடைக்கமையால் கட்சித் தலைவர்கள் தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதா? இல்லையா என்பதில் திரிசங்கு சொர்க்க நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினை சர்வதேசத்தையும் ஈர்த்துள்ளது

## தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவாக ஆளுங்கட்சியினர் ஆர்ப்பாட்டம்

[கொழும்பு]

உத்தேச அரசியல் அமைப்பு சீர் திருத்த திட்டத்தை பாராளுமன்றத்தில் உடனடியாக சமர்ப்பிக்குமாறு கோரியும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரித்தும் அரச ஆதரவாளர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

[8ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு ஈ.பி.டி.பி.யிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

உத்தேச அரசியல் தீர்வு திட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி ஈ.பி.டி.பி.கட்சியிடம் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பின் போதே ஈ.பி.டி.பியிடம் ஜனாதிபதி இவ் வேண்டு கோளை விடுத்துள்ளார்.

## பாராளுமன்றத்தின் முன் நாளை ஆர்ப்பாட்டம்; ஜே. வி. பி. தயாராகிறது

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்பு சீர் திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று ஜே.வி.பி. கட்சியினர் பாராளுமன்றக் கட்டடத்தின் முன் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த இருப்பதாக கட்சியின் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்;

(8ஆம்பக்கம் பார்க்க)

## சிங்கள உறுமய கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசின் உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை சிங்கள உறுமயக் கட்சி ஒரு போதும் ஆதரிக்க மாட்டா தென அக்கட்சியின் செயலாளர் திலக் கருணரட்னா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்

அமைப்பு சீர்திருத்தத்தை
சிங்கள உறுமயக் கட்சி ஒரு
போதும் ஆதரிக்க மாட்டா

தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்
(8 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேசத்தையும ஈர்த்துள்ளது

## முன்னாள் அமைதிப்படைத் தளபதி கருத்து

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையை வெறுமனே உள்நாட்டுப் பிரச்சினையாக மட்டும் எவரும் கருதமுடியாது அது சர்வதேச சமூகத்தையும் ஈர்த்துள்ளது என்று முன்னால் இந்திய அமைதிப்படை தளபதி ஜெனரல் அசோக் மேத்தா கூறியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான எம். எச், எம். அஷ்ரப்பை கொழும்பில் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலை

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# பிக்குமார் குழு நேற்று வவுனியா விஜயம்

(வவுனியா)

தென் இலங்கையில் இருந்து சமாதானம் வேண்டி பத்துப் பேர் கொண்ட பிக்குமார் குழுவொன்று நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்துள்ளது.

இச் சமாதானத்தூதுக் குழுவினர் நெலுக்குளத்தில் உள்ள தமிழ் அகதிகள் முகாமிற்கும். உலுக்குளத்தில் உள்ள சிங்கள

[8ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் படைக்கு புதிய ரக யுத்த விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

ரஷ்யா மற்றும் இஸ்ரேலில் இருந்து இலங்கை விமானப் படைக்கு புதிய தாக்குதல் விமானங்கள், உலங்கு வானூர்திகள், கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவில் இருந்து மிக் 27 ரக சுப்பசொனிக் விமானங்கள் நான்கு கடந்த வாரம் கொழும்புக்கு வந்திருப்பதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இஸ்ரேலில்

(8ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள் கப்பல் சீட்டு நாளை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைக்கும், திருமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டுள்ள ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பலுக்கான பயணச்சீட்டுக்கள் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

[8ஆம் பக்கம் பார்க்க]

# தீர்வுத் திட்டத்தை ஆதரித்து இரண்டு வாக்குகள் அளிக்கவும் தயாரான பிரதமர்

(கொழும்பு)

நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களிப்பீர்களா? என்று ஜனாதிபதி சந்திரிகா தனது தாயாரும், பிரதமருமாகிய சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் கேட்ட போது மகளே எனக்கு ஒரே ஒரு வாக்கு மட்டுமே உண்டு அதனையே என் (8 ஆம் பக்கம் பார்க்க)

### உத்தேச அரசியல் அமைப்பு குறித்து

# அரசும் - ஐ.தே. கட்சியும் இன்று இறுதியாகச் சந்திக்கின்றன

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியினால் நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட இருக்கும் அரசியல் சீர்திருத்த நகல் வரைவு தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று சந்தித்து பேச உள்ளனர்.

இன்று காலை 11.30 மணியளவில் அலரிமாளிகையில் நடைபெற இருக்கும் இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக்கட்சி தலைவர் ரணில்விக்கிரமசிங்க கலந்து கொள்ள மாட்டார் என்று ஐ தே. கட்சி

(8ஆம் பக்கம்பார்க்க)

# வருமானம் இன்றி இருக்கும் நாம் குடும்பம் நடத்துவது எவ்வாறு?

## பாசையூர் கடற்றொழிலாளர் மகஜர்

(யாழ்ப்பாணம்)

தொழிலிற்கும் செல்ல முடியாது வருமானம் எதுவும் இன்றி இருக்கும் நாம் எவ்வாறு எமது குடும்பத்தை வழி நடத்துவது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

மேற்கண்டவாறு பாசையூர் சென். அன்ரனிஸ் கடற்றொழிலாளர் சமாசம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தாவிற்கு அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"எமது கிராம மக்கள் இரண்டாவது தடவையாக 11 ஆம் திகதி 5 ஆம் மாதம் தொடக்கம் இடம்பெயர்ந்து மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலி போன்ற பல பகுதிகளில் சொல்லொண்ணாத் துயரோடு வாழ்ந்து கொண்டிருப்பதை தாங்கள் அறியாமல் இருக்கமுடியாது.

கடந்த வருட இறுதிப் பகுதியிலும் இடம் பெயர்ந்து பாண்டியன் தாழ்வு, ஈச்சமோட்டைப் பகுதிகளில் இருந்த போது 80 நாட்கள் எமது தொழில் முதல்கள் கடலில் அழிந்து கொண்டிருந்தன இந் நிலையில் தங்களிடம் வேண்டிக் கொண்டதற்கமைய தாங்கள் எடுத்த முயற்சியினால் பாதிப்படைந்த நிலையில் எமது தொழில் முதல்கள் மீட்கப்பட்டன இதற்கு முதற் கண் நன்றி கூறுகின்றோம்.

அக் காலப் பகுதியில் அரசால்தலைக்கு 25 வீதம் தருவதாகக் கூறப்பட்டிருந்தது ஏனோ அந்தப் பணம் கிடைக்கப்பெறவில்லை.

மேலும் நாம் 2 ஆவது தடவையாக 11 ஆம் திகதி ஐந்தாம் மாதம் இடம் பெயர்ந்து 81 நாட்கள் முடிந்த நிலையில் எல்லோருக்கும் வழங்கப்படும் பொது நிவாரணம் மட்டுமே எமக்கு வழங்கப்படுகின்றது.

அப் பகுதியில் எமது தொழிலாளர்களும் போகும் போது பல நடைமுறைச் சிக்கல்கள் எழும் இச்சிக்கலானது அந்தந்தப் பகுதிக்குரிய தொழிலாளர்களுக்கே நன்கு விளங்கும் அதனால் எமது தொழிலாளர்கள் எமது துறையிலே தொழில் புரிய அனுமதிக்கப்படல் வேண்டும்.

கடலிலே மீண்டும் அழிந்து கொண்டிருக்கும் எமது உயிர் நாடியான தொழில் உபகரணங்களை மீட்கவும் துறையில் உள்ள வள்ளங்களை பார்வையிட்டுத் திருத்தவும் அனுமதி வேண்டித் தருவதோடு அழிந்து கொண்டிருக்கும் எமது தொழில் முதல்களுக்கு நஷ்ட நிவாரணம் பெற்றுத்தருமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## கள்ளநோட்டு தயாரிக்கும் குழு பிடிபட்டது

(கொழும்பு)

அக்கரைப்பத்தனை பொலிஸார், 90 ஆயிரம் ரூபா பெறுமதியான கள்ள நோட்டுக்களை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், கள்ளநோட்டுத் தயாரிக்கும் கும்பலைச் சேர்ந்த 6 பேரையும், கைது செய்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா தாள்களையே இவர்கள் தயாரித்து வந்ததாகவும், அதற்குப் பயன்படுத்திவந்த அச்சுஇயந்திரம் மற்றும் உபகரணங்களை கைப்பற்றியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## யூ.என்.எச்.சி. ஆர் உதவி

(துன்னாலை)

அண்மையில் ஏற்பட்டுள்ள யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து வடமராட்சியில்தங்கி வாழும் மக்களுக்கு யூ என்.எச் சி.ஆர். பல்வேறு உதவிகளை வழங்கிவருகிறது

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களின் நன்மைகருதி பல தனியார் காணிகளை துப்பரவு செய்து தற்காலிக குடிசைகளையும் அமைத்துக்கொடுத்துள்ளனர். (த-41)

---


சிறப்பு விளம்பரம்

### முன்பள்ளி பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால்-வழியில் ஆறுமாதப் பயிற்சி க. பொ. த [சா/த] சித்தி தகைமை விபரங்களுக்கு: பாலர் ஆசிரியர் சங்கம் கொக்குவில் (1592)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பொதுப்பட்டமளிப்பு 2000.10.06

கலாநிதி/ முதுமாணி/ பட்டங்கள்/ டிப்ளோமா ஆகியபட்டங்களைஅளிப்பதற்காக 2000 10.06 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் பட்டங்கள் பெறத் தகுதியுடையவர்கள் 2000.08 31க்கு முன்னர் தமதுவேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

01. கலாநிதி தேர்வு
02. முதுதத்துவமாணித் தேர்வு
03. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு
04. வணிகமாணித் தேர்வு
05. தொழில் நிர்வாக மாணித்தேர்வு
06 விஞ்ஞானமாணித் தேர்வு(பொது/சிறப்பு)
07 கலைமாணித்தேர்வு (பொது/சிறப்பு)
08. இசை, நட்டிய கலைமணித்தேர்வு
09. நுண்கலைமாணி (இசை/நடனம்] தேர்வு
10. சித்த வைத்திய, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு
11. விவசாய விஞ்ஞான மாணித் தேர்வு

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்டதிகதிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும் மற்றும் விபரங்களையும் முத்திரை ஒட்டிய 23 10 செ. மீ. அளவுடைய சுய விலாசமிடப்பட்ட கடித உறையை பிரதிப் பதிவாளர், தேர்வுகளும் அனுமதிகளும்கிளை, பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுகளும் அனுமதிகளும்கிளையில் நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும். மேலும் படிவங்களைகீழ் வரும் முகவரிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

01 வவுனியா வளாகம், புகையிரத நிலைய வீதி, வவுனியா.

02. யாழ். கூட்டுறவு பண்டசாலை, EG4, மத்திய வீதி, கொழும்பு 13

பதிவாளர்

(கி-686)


---

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகிறது.

### சங்கானை

| | |
|---|---|
| 138462 ஏ | 141361 ஏ |
| 146467 ஏ | 146467 பி |
| 150339 ஏ | 150339 பி |
| 150340 ஏ | 150340 பி |
| 150462 ஏ | 150462 பி |
| 150462 சி | 150614 ஏ |
| 150614 பி | 150632 ஏ |
| 150632 பி | 150754 ஏ |
| 15 754 பி | 153270 ஏ |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 143490 ஏ | 143490 பி |
| 143490 சி | 143490 டி |
| 148754 ஏ | 148757 ஏ |
| 148757 பி | 149564 ஏ |
| 153098 ஏ | 153098 பி |
| 148754 பி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 142988 ஏ | 143173 ஏ |
| 144253 ஏ | 144253 பி |
| 144445 ஏ | 144601 ஏ |
| 144601 பி | 144601 சி |
| 144601 டி | 149874 ஏ |
| 149917 ஏ | 149948 ஏ |
| 149948 பி | 149948 சி |
| 150007 ஏ | 150033 ஏ |
| 150050 ஏ | 150050 பி |
| 150050 சி | 150050 டி |
| 150050 ஈ | 150116 ஏ |
| 150116 பி | 150116 சி |
| 150116 டி | 150140 ஏ |
| 150147 ஏ | 150147 பி |
| 150147 சி | 150152 ஏ |
| 150152 பி | 150152 சி |
| 150170 ஏ | 150171 ஏ |
| 150200 ஏ | 150200 பி |
| 150228 ஏ | 150228 பி |
| 150228 சி | 150237 ஏ |
| 150237 பி | 150237 சி |
| 152302 ஏ | 152336 ஏ |
| 152338 ஏ | 152424 ஏ |
| 152462 ஏ | 152480 ஏ |
| 152604 ஏ | 152604 பி |
| 152686 ஏ | 152686 பி |
| 152686 சி | 152686 டி |
| 152715 ஏ | 152716 ஏ |
| 152746 ஏ | 152746 பி |
| 152746 சி | 152746 டி |
| 152752 ஏ | 152752 பி |
| 152776 ஏ | 152776 பி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 143299 ஏ | 143299 பி |
| 143300 ஏ | 143300 பி |
| 143328 ஏ | 143328 பி |
| 143328 சி | 143328 டி |
| 143443 ஏ | 152467 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 138986 ஏ | 143164 ஏ |
| 144292 ஏ | 144292 பி |
| 144292 சி | 144292 டி |
| 144292 ஈ | 149994 ஏ |
| 149994 பி | 149994 சி |
| 150019 ஏ | 150019 பி |
| 150145 ஏ | 150197 ஏ |
| 150202 ஏ | 150223 ஏ |
| 150223 பி | 150283 ஏ |
| 150283 பி | 150287 ஏ |
| 152474 ஏ | 152568 ஏ |
| 152568 பி | 152568 சி |
| 152568 டி | 152568 ஈ |
| 154013 ஏ | 143913 ஏ |
| 143970 ஏ | 143970 பி |
| 143970 சி | 147258 ஏ |
| 147258 பி | 150356 ஏ |
| 150356 பி | 150359 ஏ |
| 150371 ஏ | 150371 பி |
| 150386 ஏ | 150402 ஏ |
| 150402 பி | 150684 ஏ |
| 150684 பி | 150705 ஏ |
| 153278 ஏ | 153325 ஏ |
| 153373 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 142062 ஏ | 146393 ஏ |
| 148305 ஏ | 150378 ஏ |
| 150473 ஏ | 150473 பி |
| 150473 சி | 150487 ஏ |
| 150511 ஏ | 150560 ஏ |
| 150560 பி | 150560 சி |
| 150598 ஏ | 150598 பி |
| 150620 ஏ | 153252 ஏ |
| 153252 பி | 153252 சி |
| 153272 ஏ | 153272 பி |
| 153272 சி | 153272 டி |
| 153409 ஏ | 153436 ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 141276 ஏ | 144059 ஏ |
| 144059 பி | 146343 ஏ |
| 146343 பி | 150345 ஏ |
| 150345 பி | 150379 ஏ |
| 150434 ஏ | 150434 பி |
| 150595 ஏ | 150595 பி |
| 150596 ஏ | 153215 ஏ |
| 153215 பி | 153216 ஏ |
| 153219 ஏ | 153219 பி |
| 153262 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 146415 ஏ | 146415 பி |
| 150346 ஏ | 150426 ஏ |
| 150426 பி | 150426 சி |
| 150426 டி | 150426 ஈ |
| 150426 எவ் | 150463 ஏ |
| 150506 ஏ | 150506 பி |
| 150507 ஏ | 150507 பி |
| 150507 சி | 150543 ஏ |
| 150543 பி | 150563 ஏ |
| 150563 பி | 150641 ஏ |
| 150660 ஏ | 150689 ஏ |
| 150689 பி | 150689 சி |
| 153243 ஏ | 153433 ஏ |
| 153433 பி | 153433 சி |

(சு)

---

★ யாழ் பகுதியில்

## மின்வெட்டு நேரத்தை மாற்றி அமைக்கவும்

யாழ் பகுதியில் தற்போது அமுலில் உள்ள மின்வெட்டு நேரத்தை மாற்றி அமைக்குமாறு மின்சார சபையினருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. [உயர்தர] பரீட்சை நடைபெற்றுவரும் இவ்வேளையில் இப்படியான மின்வெட்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்குப் பெரும் இக்கட்டான நிலையைத் தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே நடைமுறையில் உள்ள இம் மின்வெட்டு நேரங்களை மாணவருக்கு பாதகம் இல்லாத வகையில் மாற்றி அமைப்பது உசிதமாக இருக்கும் என மாணவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது,

## ஆடிப்பூரவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணம்பாய் ஸ்ரீகண்ணாம்பிகை ஆடிப்பூரவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். [த]

---

# சங்கே முழங்கு

## மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டியவர்களே எட்டி உதைப்பதா?

யாழ். குடாநாட்டில் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்கள், சமூகப் பெரியவர்களின் ஆசியுடன் அனுமதி அட்டைகளை வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்தி, அனர்த்த சூழல்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களை ஆறுதல்படுத்தி பரீட்சைக்கு அனுப்பும் வைபவம் நாம் அறிந்ததே.

ஆனால் இளவாலையில் உள்ள மகளிர்பாடசாலை ஒன்றில் அதிபர் இந்த நடைமுறைக்கு விதிவிலக்காகவே செயற்பட்டு நடந்திருக்கிறார் என்பது பெற்றோராகிய எமக்கும், எம் பிள்ளைகளுக்கும் மிகுந்த மனவேதனையைத் தந்துள்ளது.

தனது கையால் பரீட்சை அனுமதி அட்டையை வழங்கி மாணவர்களுக்கு ஆசிகூற வேண்டிய அதிபர் இது விடயத்தில் ஒரவஞ்சகத்தனமாக நடந்து கொண்டமை பரீட்சைக்குத் தோற்றும் இளம் பிஞ்சுகளின் மனதில் சொல்லொணா வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

சமூகத்தை வழி நடத்த வேண்டிய அதிபர், ஆசிரியர்களே பொறுப்பற்ற முறையில் இவ்வாறு நடந்து கொள்வது குறித்து பெற்றோராகிய நாம் பெரும் அதிருப்தியடைந்துள்ளோம்.

பல்வேறு துன்பங்கள் மத்தியில்அல்லலுற்று மிகுந்த சிரமத்தின் மத்தியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட வேண்டியவர்களே எட்டி உதைப்பதா?

சம்பந்தப்பட்டோர் இது விடயத்தில் இனியாவது அக்கறையுடன் செயற்படுவார்களென எதிர் பார்ப்போம்.

வி. டெய்சி
[இளவாலை]

(பாதிக்கப்பட்ட பெற்றோர் சார்பில்)

# இடம் பெயர்ந்தோருக்கான உதவி சகலருக்கும் கிடைக்கவில்லை

## பாதிக்கப்பட்டோர் பொருமல்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி வலிகாமப் பிரதேசங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களில் பெரும்பான்மையான குடும்பங்களுக்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளின் உதவிகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய அமைப்புகள் வழங்கியஉணவுப்பொருட்கள் உணவு அல்லாதபொருட்கள் சிலருக்குக் கிடைத்தும்பலருக்குக் கிடைக்காமலும் இருக்கின்றனஎனத் தெரியவருகின்றது.

இவர்களின் உதவிவழங்கல்களின் இலக்குக்குடும்பங்கள் பற்றிய வரைகோடுகள் இடத்துக்கு இடம் மாறுபாடாக இருப்பது பற்றியும் இடம்பெயர்ந்தோர்மத்தியில் பேசப்படுகின்றது.

சில இடங்களில் உத்தியோகத்தர்கள் குடும்பங்களுக்கு இவர்களின் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை வேறு இடங்களில் உத்தியோகத்தர்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கவேண்டாமென எமக்கு அரச செயலகத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் இவ் அமைப்புகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க,இவ் அமைப்புகளின் நிவாரணப் பொருட்கள் கிடைக்காத குடும்பங்களின் பிரதிநிதிகள் கிராமசேவையாளர்கள் மற்றும் பிரதேச செயலர்களிடம் புகார் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது. (க-77)

## சரசாலையில் இருந்து மூதாட்டி கூட்டி வரப்பட்டார்

(தென்மராட்சி)

சரசாலை வடக்கில் நிர்க்கதி நிலையில் விடப்பட்டிருந்த வயதுமுதிர்ந்த தாயாரை அவரது மகனொருவர் அங்கு சென்று யாக்கரு வழியாக கடந்த இரு நாட்களுக்குமுன் அழைத்து வந்துள்ளார்.

இப்பெண்மணி அகோர ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிக் குண்டுச் சத்தங்களுக்கும் மத்தியில் சரசாலை வடக்கில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சரசாலை மற்றும் மட்டுவில் பகுதிகளில் எந்நேரமும் துப்பாக்கி வேட்டுக்கள் மற்றும் மோட்டோர் சத்தங்களும் கேட்ட வண்ணமிருந்ததாக அவர் தெரிவித்தார்.

இப்பகுதியில் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் பொது மக்கள் மிகவும் சிறியதொகையில் தங்கியுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. (க-77)

## பாணின் நிறையை 450 கிராமாக பேணுமாறு கொழும்பிலிருந்து உத்தரவு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பாணின் அளவினை 450 கிராமாக அதிகரிக்க உரிய துறையினர் மூலம் நடவடிக்கை எடுக்கும்படி யாழ் மாவட்ட அரச செயலகத்திற்கு கொழும்பில் இருந்து அறிவித்தல் கிடைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இங்கு தற்போது விற்பனை செய்யப்படும் பாணின் அளவு 320 கிராம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாணின் நிறையை அதிகரிக்கச்செய்யும்படி மாவட்டத்தில் பல அமைபுகள் கோரிக்கை விடுத்து வந்திருந்தமையும் தெரிந்ததே. (க - 77)

## யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய வைத்தியர் விடுதிக்கான நீர் விநியோகம் சீரில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள, புதிய வைத்தியர்கள் விடுதிக்கான நீர் விநியோகம் கடந்த சில.வாரங்களாக சீரற்றுக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவ் விடுதியில் தங்கியுள்ள வைத்தியர்கள் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடமையில் இருக்கும் வேளைகளில் நீர் விநியோகம் இடம் பெறுவதனால் அதனைச் சேமித்து வைத்துப் பயன் படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும்.

இது குறித்து வைத்திய சாலை நிர்வாகத்தினருக்கு முறைப்பாடு செய்திருப்பதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர். (உ-12)

## பொதுத்தேர்தலில் வெளிநாட்டு கண்காணிப்பாளர் ஈடுபடுத்தப்படுவர்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத்தேர்தலில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,வாக்குச் சீட்டுக்கள் களவாடப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்கும் உடனடி உத்தரவு பிறப்பித்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற தேர்தல் மோசடிகள் குறித்து பல கட்சிகளும் தேர்தல் ஆணையாளருக்கு எடுத்துரைத்ததன் பேரில்,அதனைத் தவிர்க்கும் வகையிலேயே வெளிநாட்டு கண்காணிப்பாளர்,தேர்தல் பணியில் ஈடுபடவிருப்பதாக தெரியவருகிறது. [உ]


## பங்குத் தந்தைக்கு கொலைப் பயமுறுத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆயித்திய மடத்தின்பங்குத் தந்தையான அருட்திரு ஜோசப் இக்னேசியஸ் சந்திராவுக்கு இனம்தெரியாத ஆயுதக் குழுவினரால் கொலைப் பயமுறுத்தல் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மேமாதம்17ம்திகதி மட்டக்களப்பில் 9 குழந்தைகளை படையினர் கண்மூடித்தனமாகசுட்டுக் கொன்றதை நேரில் பார்த்ததன் காரணத்தினாலேயே இவர்மீது இனம் தெரியாத குழுவினரால் கொலை அச்சுறுத்தல்விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## கனடாவில் பெருமை பெறும் பேராயர்



கனடாவில் உள்ள ரொறன்டோ பல்கலைக் கழகம் தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களை வருகைப்பேராயராக ஆறுமாத காலம் பணியாற்றும்படிஅழைத்துள்ளது.

மூன்றாம் உலக கிறிஸ்தவ இறையியல் என்னும் துறையில் பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கற்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

பேராயர் அவர்கள் நாட்டின் கொந்தளிப்பான சூழ்நிலை காரணமாக 2002ம் ஆண்டு தாம் இந்தப் பணியை மேற்கொள்ள முடியும் என்று ரொறன்டோ பல்கலைக்கழகத்திற்கு அறிவித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## இலவச மருத்துவ முகாம்

(அரியாலை)

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் இலவச மருத்துவ முகாம் அண்மையில் நீர்வேலி தெற்குஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல் நிலையத்தில் நடைபெற்றது.

மேற்படி முகாமில் கண், நீரிழிவு, இரத்த அழுத்தம், நெஞ்சு நோய்ப் பரிசோதனைகள் பிரபல மருத்துவ நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்டன. (த-106)

## பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள்

(அரியாலை)

யாழ்ப்பாண மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரியில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் தலைவராக வே. மணிமாறனும், செயலாளராக வே. ஜீவரூபனும், பொருளாளராக எஸ். ரங்காதரனும் தெரிவு செய்யப் பட்டனர். (த-106)

## யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணி மீண்டும் ஆரம்பம்?

(கொழும்பு)

யாழ்.குடா நாட்டில்இடைநிறுத்தப்பட்ட கண்ணிவெடி அகற்றும் பணியை,மீளவும் இங்கு ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளில் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஈடுபட்டு வருகிறது.

தற்போதைய போர்ச் சூழலை அடுத்து,யு.என்.டி.பி பிரிவினரால் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சிம்பாவே குழுவினர் கடந்த ஏப்ரல் மாத பிற்பகுதியில் இங்கிருந்து வெளியேறியமை தெரிந்ததே.

தற்போது கண்ணிவெடி அகற்றுவதற்கு ஏற்ற சூழல் நிலவுவதை அடுத்து,மீண்டும் தமது பணியினைத் தொடர யு என்.டி பிபிரிவினர் முன்வந்துள்ளனர்.

எனினும்,யு.என்.டி.பியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் விஸ்வாம் கொழும்பு திரும்பியதும் இது குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம்,

1998ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பமான கண்ணிவெடி அகற்றும்பணி, இவ்வருட முற்பகுதி வரை 68ஆயிரத்து 500சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அலுவலகம் இடம் மாற்றம்

(நெல்லியடி)

தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, தற்போது நெல்லியடி கொடிகாம வீதி லக்சுமி திரையரங்கிற்குப் பின்புறமாக இயங்கி வருகின்றது என தெரிவிக்கப்படுகிறது. [த-18]

## மட்டு. மாவட்ட வங்கிக்கிளைகளில்முறைகேடான நியமனம் அரசியல் வாதிகளின் குட்டு அம்பலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட வங்கிக் கிளைகளில், அரசியல் வாதிகளின் சிபார்சின் பேரில் அண்மையில் 18 நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களிடம், அரசியல் வாதிகள் கையூட்டுப் பெற்றே இம் முறைகேடான நியமனங்களை வழங்கியிருப்பதாக தெரியவந்துள்ளது.

வங்கியினால் பகிரங்க விண்ணப்பங்கள் ஏதும் கோரப்படாத நிலையில் 15 எழுதுநர் நியமனங்களும் 3 சிற்றூழியர் நியமனங்களும் வழங்கப்பட்டிருப்பது,குறித்து படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம்,

நியமனம் வழங்கப்பட்டவர்களில் இருவர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அங்குரார்ப்பண விழா

(யாழ்ப்பாணம்)

சென்ற ஆண்டின் 40 ஆம் இலக்க பகிரங்க சேவை ஓய்வூதியம் பெறுநர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்றது.

இந்நிதியத் தலைவராக நா.சங்கரப்பிள்ளையும், செயலாளராக ஏ. டபிள்யூ. அரியநாயகமும், பொருளாளராக இ. குமாரசாமியும் உள்ளிட்ட மொத்தம் 7 பேர் நிர்வாக அங்கத்தினராக தெரிவு செய்யப்பட்டனர். [த - 82]

## கைதடி வயோதிபர் இல்லம் மூளாய் வைத்தியசாலையில் இயங்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வயோதிபர் இல்லத்தை மூளாய் வைத்தியசாலையில் இயங்க வைப்பதற்கு வைத்தியசாலை வட்டாரங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இருப்பினும், வைத்தியசாலையின் திருத்தப்படாத கட்டடம் ஒன்றினையே வைத்தியசாலை நிர்வாகத்தினர் வழங்க முன்வந்துள்ளமையினால், கட்டடத்தைத் திருத்துவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருத்த வேலைகள்பூர்த்தியாகி முதியவர்கள் அங்கு தங்க வைக்கப்படுவார்களானால், இடப்பெயர்வின் பின்பு அவர்கள் அனுபவித்து வந்த இடைஞ்சல்கள் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-12)

## முன்பள்ளி ஆசிரியர் ஏமாற்றம் கருத்தரங்கு இடம்பெறவில்லை

(திருகோணமலை)

கடந்தமாத இறுதிப்பகுதியில் திருகோணமலையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கில் கலந்து கொள்ளவெனச் சென்ற வன்னிப்பகுதிஆசிரியர்கள் பலத்த ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

மேற்படி கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 12 ஆசிரியர்கள் திருகோணமலை சென்றிருந்தபோதும் திட்டமிட்டபடி அக்கருத்தரங்கு நடைபெறவில்லை.

இதனால் பெரும் பணம் செலவழித்துச் சென்ற முன்பள்ளி ஆசிரியர்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர். (உ)

## கொடிகாமத்தில் புதிய பஸ் சேவை

(கல்வயல்)

கொடிகாமத்தில் இருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 6.30 மணிக்கு கொடிகாமத்தில் இருந்து புறப்படும் மேற்படி சேவை 8.30மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து,மீண்டும் கொடிகாமத்துக்குஅடுத்தசேவை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-111)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல. 21

ஆக்கம் : சுதாகர்

★ பின்வரும் சொல் வரிசையில் பொருந்தாத சொல்லை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக

1) பழரசம், இளநீர், தேனீர், சர்க்கரை
2) மா, பலா, வேம்பு, தென்னை
3) கட்டில், மேசை, வாங்கு, கதவு
4) புலி, மான், சிங்கம், சிறுத்தை
5) குளம், கேணி, கடல், அருவி

★ பின்வரும் சொற்களுக்கு எதிர் கருத்துள்ள சொல்லை எழுதுக

6) அருவம் —
7) சிலர் —
8) விருப்பு —
9) இங்கே —
10) வெண்மை —

★ கீழ்தரப்படும் தகவலை வைத்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?

FATHER - KANTHAN
MOTHER - RANJANI
SON - SIVAM

11) மகனின் பெயர் என்ன? ................
12) தந்தையின் பெயரை தமிழில் எழுதுக ..............
13) சிவம் தனது பெயரை எழுதும் போது எவ்வாறு எழுதுவான் ...................

14) வானத்தில் மேகம் கருமையாக காணப்பட்டது
காற்றும் குளிர்மையாக வீசியது
சிலர் குடைகளுடன் தெருவில் தென்பட்டனர்;
மேலே கூறியவைகளை குமார் அவதானித்தான் இதிலிருந்து குமார் விளங்கிக் கொள்வது
i) மாலை நேரம் ஆகிறது
ii) வெய்யில் கடுமையாக இருக்கப் போகிறது
iii) மழை வரப்போகிறது
iv) புயல் காற்று வீசப் போகிறது

★ பின்வரும் வெற்றிடங்களை நிரப்புக.

மோகன் அவனது தந்தையுடன் மிருகக்காட்சிசாலைக்கு சென்றான். அவனும், அவனது தந்தையும் மிருகக் காட்சி சாலை வாயிலில் 15) ....................... பெற்றுக் கொண்டு உள்ளே சென்றனர் அங்கே கூண்டில் அடைக்கப்பட்டிருந்த ஒரு மிருகம் கர்ச்சனை செய்தது மோகன் அந்த மிருகம் 16) ..................... என அறிந்து கொண்டான் சற்று தூரம் போனதும் பிளிறல் சத்தம் கேட்டது அவனது தந்தை அது 17) ............................ என அவனுக்கு சொன்னார் இவ்வாறு பார்த்துக் கொண்டு பறவைகள் பகுதியை அடைந்தனர். அங்கே கூட்டில் நின்ற பறவையின் அகவும் சத்தம் கேட்டது. அப்பறவை 18) ...................... என அவனுக்கு முன்னரே தெரியும். அடுத்த கூட்டில் அலறல் சத்தத்தை கேட்டு அது 19) ......................... என்றும் அவன் உணர்ந்து கொண்டான். இவ்வாறு எல்லாவற்றையும் பார்த்து முடித்ததும் நேரத்தை அறிய விரும்பிய மோகன் தந்தையிடம் கேட்டான் அதற்கு தந்தை பெரிய முள் பன்னிரெண்டிலும் சிறிய முள்ஐந்திலும் நிற்பதாகசொன்னார் இதனை வைத்து அவன் நேரம் 20) ................ என அறிந்து கொண்டான்;

★ கடை ஒன்றில் கதவில் எழுதப்பட்டிருந்த சில பொருட்களின் விலை விபரம் தரப்படுகிறது.

1 kg அரிசி—40.00
1 kg சீனி —35.00
1 kg மா —18.00
1 லீற்றர் தே. எண்ணெய்—56.00
1 தீப்பெட்டி—3.00

21) ஒருவர் 2 kg அரிசியும், 1 kg சீனியும் வாங்க வேண்டுமெனின் அவர் செலவு செய்யும் பணம் எவ்வளவு?
22) ஒரு போத்தல் தேங்காய் எண்ணெயின் விலை என்ன?
23) ஒரு டசின் தீப்பெட்டியின் விலை என்ன?
24) ஒருவர் ரூபா 72 கொடுத்து மா வாங்கினார் அவர் எத்தனை kg மா வாங்கி இருப்பார்?
25) பின்வரும் சிட்டையை நிரப்புக

| அளவு | பொருள் | ரூபா | சதம் |
|---|---|---|---|
| 4 kg | அரிசி | i) | ........................ |
| 500g | சீனி | ii) | ........................ |
| 4 | தீப்பெட்டி | iii) | ........................ |
| 5 kg | மா | iv) | ........................ |
| | மொத்தம் | v) | ........................ |

நான் புகையிரதத்தில் பயணம் செய்து கொண்டிருந்த போது என்ற தலையங்கத்தின் கீழ் 5 வசனம் எழுதுக.

26) ________________________________
27) ________________________________
28) ________________________________
29) ________________________________
30) ________________________________

குறிப்பு:-

இதற்கான விடைகளை 08 - 08 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

## தரம் ஐந்து புலமைப் பரீட்சை வினா இல. 20

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

1) ச. வித்யா ஞானசாரியார் கல்லூரி யாழ்ப்பாணம்.
2) பா. சாரங்கன் புனிதஜோண் பொஸ்கோ யாழ்ப்பாணம்
3) ர. கௌதமி இராமநாதன் கல்லூரி யாழ்ப்பாணம்.
4) தி. வினோதா நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம் யாழ்ப்பாணம்.
5) நி. கீர்த்தனா குடமியன் த. க. பாடசாலை யாழ்ப்பாணம்.
6) ர. சுபாஜினி, றோ. க. த. க. பாடசாலை யாழ்ப்பாணம்.
7) தி. றெசிலோஜீனன், சென்ஜோண் பொஸ்கோ யாழ்ப்பாணம்.
8) வே. மேகலா, தியாகராசா ம. ம. வி. காரைநகர்.
9) பு. ஜீவனா, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.
10) சி. மாதங்கி, நாவலர் தமிழ் வித்தியாலயம் கோப்பாய்.
11 தே. சம்யுக்தா சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.
12) சி. சிவறஞ்சினி தா, இ. த. க. பாடசாலை யாழ்ப்பாணம்.
13) செ. தாட்சாயினி ஆவரங்கால் நடராஜா, இராமலிங்கம் வித்தியாலயம்.
14) க. சாளினி ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்.
15) அ. சசிகலா, மணியகாரன் தோட்டப் பாடசாலை யாழ்ப்பாணம்.
16) அ. நிக்ஷலா றோ. க. த. க. பாடசாலை சுன்னாகம்.
17) சி. துவாரகா மணியகாரன் தோட்டப் பாடசாலை யாழ்ப்பாணம்.
18) செ. சசிக்கா, நாவலர் தமிழ் வித்தியாலயம் கோப்பாய்.
19) சி. சிறிகாந் உடுவில் மகளிர் கல்லூரி உடுவில்.
20) இ. தணிகைவாசன், புனித ஜோண் பொஸ்கோ யாழ்ப்பாணம்.
21) இ. நிகாஜினி, துன்னாலை தெற்கு அ. த. க. பாடசாலை யாழ்ப்பாணம்.
22) சா. சரவணன், சரவணபவானந்த வித்தியாலயம் யாழ்ப்பாணம்.
23) லோ. நிதர்சன், றோ. க. த. க. பாடசாலை யாழ்ப்பாணம்.
24) லோ. தர்சினி, றோ. க, த. க. பாடசாலை யாழ்ப்பாணம்.
25) சி. சம்பூரணி, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.
26) ச. பாமினி, வட்டுக் கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயம் யாழ்ப்பாணம்.
27) து. நிருத்திகா, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.
28) மு. பிரணவன், காசிநாதர் வித்தியாலயம் கரவெட்டி.
29) வ. பகிரதி, இந்து ஆரம்பப்பாடசாலை யாழ்ப்பாணம்.
30) சி. டினேஸன், உடுவில் மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.
31) கு. அஜந்தா, கொட்டடி நமசிவாய வித்தியாலயம் யாழ்ப்பாணம்.
32) து. மோகனபிரியா, ஸ்ரீகணேச வித்தியாலயம் சித்தங்கேணி.
33) வ. நர்மதா, யா.கோ.த. வித்தியாலயம்.
34) ம. ஜெயதீபன், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.
35) க. நிரோஸ், யா.அ.ச.ம. வித்தியாலயம்.
36) கை. தனுஜன், சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்
37) இ. நிரஞ்சித், வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயம்,
38) செ. அஷான், உடுவில் மகளிர் கல்லூரி.
39) சி. சுகந்தினி, வல்வை மகளிர் வித்தியாலயம் யாழ்ப்பாணம்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விப் பகுதி வினா இல. 21

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................
சொந்த முகவரி: ..............................
கற்கும் பாடசாலை: ..............................
மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## புலமைப் பரீட்சை வினா இல. 20 இன் விடைகள்

1) 2
2) 2
3) 2
4) 2
5) பெருமகிழ்ச்சியுடன்
6) தகைமையும்
7) சிறந்த
8) குறைகளையும்
9) 3
10) 1
11) 2
12) 3
13) கிழக்கு 2 KM
14) 20 நிமிடம்
15) ரூபா 980
16) ரூபா 270
17) ரூபா 75
18) ரூபா 174.50
19) உலர்த்தல் முறை
20) தகரப்பேணிகள் 2, உலோகக்கம்பி, ஆணிகள் 2 (வெற்றுத்தீப்பெட்டிகள் 2)
21) ஆமை, நண்டு
22) நாகமரம்
23) விளாகிரி, தேசிக்காய்

## உற்சவம் ஆரம்பம்

[மந்திகை]
அல்வாய் அருள்மிகு முத்துமாரி அம்மன் வருடாந்த உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் இம் மதம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (த-25)

## இன்று தீர்த்த உற்சவம்

(அரியாலை)
ஆவரங்கால் அருள்மிகு பர்பதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்க சுவாமி தேவஸ்தான தீர்த்தோற்சவம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். (த-106)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
வேலணை பெருங்குள முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் நடைபெறவுள்ளது. (செ)

## வேலைவாய்ப்பு

[நெல்லியடி]
மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில்; இடம்பெயர்ந்த மூன்று பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

(த-18)

## திருடர் கைவரிசை

[துன்னாலை]
வரணி இயற்றாலைப் பகுதி வீடொன்றில் கட்டப்பட்டிருந்தமாடுகள் ஊரடங்கு வேளையில் களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அப்பகுதிகிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் பல துன்பங்களை அனுபவிக்கும் இவ்வேளை திருடர்களுடைய செயற்பாடு குறித்து பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

[த-41]

இன்று ஒரு தகவல்

# நிம்மதியான வாழ்வு நீண்ட ஆயுளின் அத்திவாரம்

ஒரு நாள் தற்கொலையைப் பற்றி சில விபரங்களை கூறிக் கொண்டிருந்தேன். அதை கேட்டு விட்டு வேகமாக ஒருவர் வந்தார். அவர் வந்த வேகத்தைப் பார்த்த போது எனக்கும் கொஞ்சம் பயமாக இருந்தது.

அத்தனை வேகம் அவர் நடையில். அந்த தகவலை கேட்டுவிட்டு ''அவர் எந்த முடிவுக்கு வந்தாரோ தெரிய வில்லை'' என்று தலையை பிச்சுக் கொள்ள வேண்டும் போல இருந்தது எனக்கு.

செயல் வழியாக அது முடியாத காரியம் என்பதினால் பேசாமல் இருந்தேன்.

வந்தவர் சொன்னார்.

''சார்! தற்கொலை பண்ணிக் கொண்டு அரை குறை வயதில் செத்துப் போகிறவர்களைப் பற்றி காலை நேரத்தில் எதற்கு சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதனை விட தீர்க்க ஆயுள் கொண்டு நிறைய நாள் சௌக்கியமாக வாழ்கிறவர்களைப் பற்றி ஏதாவது விபரம் இருந்தால் சொல்லக் கூடாதா? என்றார்.

சொல்லாவிட்டால் விட மாட்டார் போல் இருந்தது. உடனே எதைஎதையோ தேடி சிலவிபரங்கள் கிடைத்தன.

உலகத்தில் அதிக காலம் உயிரோடு வாழ்ந்த மனிதன் யார்? ஆதார பூர்வமான தகவலின் படி அவர் ஒரு ஜப்பான்காரர். அவர் பெயர் சிக்ஷியோ இசுமி இவர்1986 பெப்ரவரி 21 லே. தான் இறந்து போனார் அந்த சமயத்தில் அவருக்கு வயது. 120 வருடம் 237 நாள் ஜப்பானிலுள்ள மிகவும் பின்தங்கிய தீவுப் பகுதி ஒன்றிலே பிறந்து வளர்ந்தவர். கடுமையான உழைப்பாளியாக வாழ்ந்து வந்தார். வயதான காலத்திலும் உடற்பயிற்சி செய்வதினை கைவிடவில்லை மீன், காய்கறி நிறைய உண்பவர். மற்ற மாமிசம் எல்லாம் குறைவாகத் தான் சாப்பிடுவார்.

சோவியத் யூனியன் இது சம்பந்தமாக சில ஆய்வுகளை நடத்தியது. அங்கு 1960 இல் பெண்களுடையசராசரி வயது 73.6 ஆண்கள் 64.5 1972 ஆண்டுகளில் பார்த்தால் இது படிப்படியா குறைந்து கொண்டு வந்திருக்கிறது. அப்போது பெண்களுடைய சராசரி வயது 72 6 ஆண்களுடைய வயது 65 இது எப்படி சாத்தியப்படும் என நினைக்கிறீர்களா? மதுபானங்களுக்கு எதிராக நடந்த பிரச்சாரம் தான் காரணம். மதுபான உபயோகம் குறையக் குறைய வயது கூடிக்கொண்டு வருகிறது. அதுமாத்திரமன்றி சாலை விபத்துக்களும் 37 சத வீதம் குறைந்துள்ளது.

பொதுவாக உலகத்திலேயே அதிக வயதானவர்கள் உள்ள நாடுகள் இரண்டு. ஸ்கன்டிநேவியா—ஜப்பான் ஆனால் சோவியத் யூனியன் ஆய்வாளர் 'கோஸ்லோங்' கூறிய போது தன்னுடைய பார்வையில் காகசஸ் மலைப்பகுதியிலே இருப்பவர்கள் தான் அதிக நாள் வாழ்கிறார்கள். அப்பகுதியில் இருப்பவருடைய அதிக பட்ச வயது 150 அங்கே வசிப்பவர் அதிக நாள் வாழ்வதற்கு காரணம் என்னவென்றால் பொதுவாக மலைப்பகுதியிலே உயிரினங்களுடைய வளர்ச்சி கொஞ்சம் குறைவாகவே நடக்கும். அதனைத் தவிர அங்கே இருக்கும் இயற்கைச் சூழ்நிலை, நல்ல காய்கறிகள், தயிர் எல்லாம் வளர்ச்சிக்கும், ஆயுளுக்கும் ஒரு காரணம் என்று கூறினார். அவர் இன்னும் முக்கிய கருத்தையும் முன் வைத்தார்.

ஒருமனிதன் சுயநலமாக வாழ்தல் கூடாது.

சமூகமே நல்ல நெறியில் நடத்திக் சொல்வது கூட ஒரு காரணம் நீண்ட ஆயுளுக்கு அந்த மலையடிவார ஊரில் வயதானவர்களுக்குச் சின்னவர்கள் மரியாதை, கொடுப்பார்கள். கிழடு எப்ப மண்டையைப் போடும் என்று முணுமுணுப்பது இல்லை. வேண்டிய உதவிகளைச் செய்கிறார்கள்.

இதனால் அங்கே எல்லோருக்குமான இறுக்கம் குறைகிறது. ஒருத்தர் வீட்டில் ஒரு துக்கம் என்றால் அதை அந்த ஊரில் எல்லோரும் வந்து பகிர்ந்து கொள்வார்கள்.

அதனால் சோகம் குறைகிறது. பொறாமை வருவதற்கு வாய்ப்பில்லை. பெரியவர்கள் அனுபவ முதிர்ச்சியாலே சரியான வழியைக் காட்டுகிறார்கள். இளைய தலைமுறை அந்த வழியிலே போவதால் கஷ்டங்கள் வருவது குறைவு.

பெரியவர்களின் பேச்சைக் கேளுங்கள் என்பது எதற்காக?

பிரச்சினைகளுக்கு முடிவெடுப்பது பெரியவர்களிற்கு சுலபம். ஏனென்றால் அவர்களிடம் அனுபவம் இருக்கிறது. அவர்கள் சொல்லும் படி நடந்தால் இளைஞர்களிற்கு கஷ்டம் இல்லை. குழப்ப இல்லை. பெரியவர்களிற்கும் தங்களை யாரும் மதிப்பது இல்லைஎன்றகவலையில்லை. அதனால் இரண்டு தலைமுறைகளும் நீண்ட ஆயுளோட வாழமுடியும்.

காற்றோட்டமான இடத்தில் இருக்க வேண்டும்.

முடிந்தால் திறந்த வெளியில் தூங்குங்கள்.

மூச்சை ஆழ்ந்து உள்ளிழுத்து வெளியே விடுங்கள்.

அளவோடு சாப்பிடுங்கள்.

வயிற்றின் மேல் எதுவும் அழுத்தாமல் பாருங்கள்.

நிற்கும் போது—உக்காரும் போது நடக்கும் போது

முதுகெலும்பு வளையாமல் நேராக இருங்கள்.

தினம் பல்லு விளக்கி பல்லைச் சுத்தமாய் வைத்திருங்கள்.

அளவுக்கு மீறிய வேலை செய்வது கூடாது. தினம் 7 மணி நேரமாவது தூங்குங்கள்!

கோபம், கவலை இது இரண்டையும் முடிந்த அளவு குறைத்துக் கொள்ளுங்கள் இது தான் விஞ்ஞானிகள் நீண்டஆயுளுக்கு கூறும்யோசனைகள்.

வாழ்வின் ஆயுளை வளமாக்கிக் கொள்வது மனிதனின் கைகளிலே தங்கியுள்ளது. நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமாயின், எம்மையும், எம்மனதையும்நேசிக்கவேண்டும். மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். எப்போதும் நல்லவற்றைச் சிந்தித்து நலமுடன் வாழவேண்டும். ஆயுள் சுகம் ஆண்டவன் கைகளிலுள்ளது. ஆயுள் நலம் நம் கையிலுள்ளது. (த)

தென்கச்சி சுவாமிநாதன்

# மக்களுக்கு எந்த சூழ்நிலையிலும் சேவை செய்வதே எனது குறிக்கோள்

## 51 வது படையணி தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதி மக்களை பிரதிநிதிப்படுத்துகின்ற உத்தியோகத்தர் என்ற முறையில் மக்களுக்கு எந்த விதத்திலும் சேவைசெய்ய தயாராக இருக்கின்றேன்''

இவ்வாறு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் யாழ். தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற 61 வது ஆண்டு நிறைவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய 51 வது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.பி. டபிள்யு. ஜெயசுந்தரா தெரிவித்தார்.

யாழ். மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஜெனரல் ஜெயசுந்தரா மேலும் தெரிவிக்கையில், இந்தவங்கி யாழ். மக்களுக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டுவதோடு என்னையும் இந்த நிகழ்விற்கு அழைத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன் என்றார்.

பிரதான முகாமையாளர் பி. அருமைநாயகம் உரையாற்றுகையில்; எமது வங்கியின் இத்தகைய வளர்ச்சிக்கு காரணம் எமக்கு பக்கபலமாக உள்ள வாடிக்கையாளர்களும் வங்கியின் ஊழியர்களுமேயாகும்.

தற்போதைய சூழ் நிலையில் முதன்மையான வங்கியாக இருப்பதற்கு எமது வாடிக்கையாளரின் ஒத்துழைப்பும், வங்கி ஊழியரின் அயராத முயற்சியுமே காரணம் என்றார்.

மேற்படி நிகழ்வில்மாவட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர். எ. எல். டபிள்யு. அபயவர்த்தனா, 51 வது படையணியின் சிவில் பிரிவுக்கான தலைமை அதிகாரி கேணல் அல்தநாயக்கா, மற்றும் வங்கிக் கிளை முகாமையாளர்கள், உயரதிகாரிகள், பாதுகாப்புப்படை அதிகாரிகள் ஆகியோரும் நேற்றைய ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (க-3)

# இடம்பெயர்ந்த யாழ். நல்லூர் பிரதேச மக்களுக்கு 2000 ரூபா

(சங்கானை)

அண்மைக்கால அனர்த்தங்களால்இடம் பெயர்ந்த யாழ்ப்பாணம். நல்லூர், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு தற்தாலிகக் குடிசை மற்றும் உபகரணங்களுக்கான நன்கொடையாக இரண்டாயிரம் ரூபா முதற்கட்டக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் ஜே 61, தொடக்கம் ஜே81வரையான கிராமசேவையாளர் பிரிவுக்கும்ஜே 83 தொடக்கம்ஜே87 வரையான கிராமசேவையாளர் பிரிவிலும் நல்லூர் பிரதேச செயலர்பிரிவில் ஜே 91 தொடக்கம் ஜே96 வரையும். மற்றும் ஜே 106 தொடக்கம் ஜே 109 வரையுமான கிராமசேவையாளர் பிரிவுகளுககும்சாவகச்சேரி பிரதேசசெயலர் பிரிவில் ஜே288 தொடக்கம் ஜே 347 வரையான பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்குமே இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கொடுப்பனவை விரைவாக வழங்குவதற்கு இடம்பெயர்ந்த குடும்பங்களின் பெயர்ப்பட்டியலை விரைவாக அனுப்பிவைக்குமாறு சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-2-24)

# யுத்த அனர்த்தத்தால் மரணமான அதிபர், ஆசிரியர்களின் மரணப் பணிக்கொடையை பெறமுடியும்

## இ. த. ஆ. சங்க செயலர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தங்களால் அண்மைக்காலத்தில் மரணமடைந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் மரணத்தை அத்தாட்சி படுத்தும் சான்றிதழுடன்வடக்கு கிழக்கு மாகாண ஆளுனருக்கு விண்ணப்பித்தால் மரணமடைந்தவர்களுக்கான மரணப்பணிக்கொடையினைப் பெற்றுக் கொள்ளலாமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: மரணமடைந்தவர்கள் அதிபர், ஆசிரியர்களாயின் அவர்களின் ஒய்வூதியத்திற்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இணைக்கப்பட வேண்டும் இதன் ஒரு பிரதியை, த.மகாசிவம் 53/4 துறைமுகவீதி, திருகோணமலை. என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பத்தை அனுப்புபவர்கள் பின் உருத்துடையவர்களாக இருக்க வேண்டுமெனவும் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (க-3)

# எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன

(வவுனியா)

கிளிநொச்சி பரந்தன் 2 ஆம் சட்டைப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து மனித எலும்புக்கூடுகளும் ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட மனிதஎலும்புக் கூடுகள் கிளிநொச்சி வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பின் அக்கராயன் காவல் பணிமனையில் அடையாளம் காணும் பொருட்டு வைக்கப் பட்டுள்ளது. (ந-7)

# பயிற்சி வகுப்புகள்

[நெல்லியடி]

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வசிக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு நெல்லியடி முருகமூர்த்தி சன்மார்க்க சபை மாதிரி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சி போரூட் நிறுவன ஆதரவில் ஆசிரியை செல்வி ப. நாகசோதியினால் வழங்கப்பட்டு வருகின்றது.

(க-18)

# கியூடெக் நிதியுதவி

[நெல்லியடி]

சக்கோட்டை புனித சவேரியார் பாலர் பாடசாலைக்கு கியூடெக் நிறுவனத்தினால் அன்பளிப்பாக ரூபா 50,000/-யும் 15,000/- பெறுமதியான தளபாட உபகரணங்கள், மற்றும் மாணவர்களுக்கான விளையாட்டுப்பொருட்கள் என்பன கடந்த 20ஆம் திகதி வழங்கப்பட்டது.

பாடசாலையின் அபிவிருத்தி கருதி பருத்தித்துறை பங்குத்தந்தை வண.பிதா பயஸ் இருதயதாஸின்பெரும்முயற்சியினால் இவ்வுதவி தமக்கு கிடைத்ததாக மேற்படி பாடசாலை ஆசிரியை தெரிவித்தார். (க-18)

# தரம் ஐந்து புலமைப்...

40) அ. தேவகி, வல்வை சிவகுரு வித்தியாசாலை யாழ்ப்பாணம்.
41) உ. தனுஜா, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.
42) கி. ராஜகண்ணா, இந்து ஆரம்பப்பாடசாலை யாழ்ப்பாணம்.
43) அ. சோபனா, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.
44) சி. மைதிலி, அ.மி.த.க பாடசாலை.
45) ஸ்ரீ. மயூரதி வல்வை மகளிர் வித்தியாலயம் யாழ்ப்பாணம்.
46) சி. அமலதாஸ், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
47) வி. கஜேந்திரன், வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயம்.
48) ந. சுமிதா, துன்னாலை அ.த.க பாடசாலை யாழ்ப்பாணம்.
49) சி. கிருபாலினி, அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
50) மதியூகி, மனோகரன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
51) ப. ஜெனனி, இந்து ஆரம்பப் பாடசாலை யாழ்ப்பாணம்.
52) த. லக்சுமிபாமா, கிளிநொச்சி தர்மகேணி அ.த.க.
53) செ.ஜெ.அ. நிம்றோ, யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.
54) ம. தர்மிதா, யா/ திருஞானசம்பந்தர் வித்தியாசாலை சுன்னாகம்.
55) ச. சசிரேகா, யா/ கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
56) கே. மிருஜா. கொட்டடி நமசிவாய வித்தியாலயம் யாழ்ப்பாணம்.
57) சி. அனுசலா, உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை யாழ்ப்பாணம்.
58) சி. ஜெனகன், யாழ்ப்பாண கல்லூரி.
59) ம. நியூட், புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்.

# நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதன் எதிரொலியாக

# பெங்களூரில் பெரும் வன்முறைகள் வெடித்தன

(பெங்களூர்)

**சந்தனக்கடத்தல் வீரப்பன் நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியதன் எதிரொலியாக பெங்களூரில் தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.**

**தமிழ்ப் பத்திரிகை நிறுவனங்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் மீதும் அகோரத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.**

சந்தனக்கடத்தல் வீரப்பனால், கர்நாடக மாநிலத்தின் மிகப்பெரும் சினிமா நட்சத்திரமும் லட்சோப லட்சம் வாசகர்களின் ஆதரவைப் பெற்றவருமான 70 வயதையும் கடந்து விட்ட நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட சம்பவம் கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூர் வாழ் தமிழர்களின் பாதுகாப்பினைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

சந்தனக் கடத்தல் வீரப்பன் தன்னை ஓர் தமிழனாகவும் தமிழினஉணர்ச்சிமிக்கவனாகவும்அடிக்கடி கூறிவந்தமையே தமிழர்கள் பால் அங்கு வன்முறைகளை கட்டவிழ்த்துவிட காரணமாய் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அத்துடன், சந்தனக் கடத்தல் வீரப்பனால் நடிகர் ராஜ்குமாரின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்ட ஒலிப்பேழையில், தமிழ் மக்கள் கர்நாடகப் பொலிஸாரால் கொடுமைப்படுத்தப்படுவதற்குப்பதிலடியாகவே இக் கடத்தல் இடம் பெறுவதாக குறிப்பிடப்பட்டதானது தமிழர்களுக்கு எதிரான போக்கையுடைய கர்நாடக அமைப்புக்களை சீற்றம் கொள்ள வைத்திருப்பதாய் கூறப்படுகிறது.

இந்த வகையில், கர்நாடக மாநிலத்தில்இயங்கி வருகின்ற தினத்தந்தி, தினமலர், தினச்சுடர் பத்திரிகைக் காரியாலயங்களில் உள்நுழைந்த தமிழ் இன எதிர்ப்பாளர்கள் அங்கிருந்த வாகனங்களையும் பத்திரிகைகளையும் தீமூட்டியுள்ளனர்.

இதனால் தமிழ்ப்பத்திரிகைகள் இங்கு வெளி வருவதே கேள்விக் குறியாகியுள்ளதாக சம்பந்தப்பட்டவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனியார் தமிழ் தொலைக்காட்சிச் சேவைகள்வன்முறையாளர்களால் தடைசெய்யப்பட்டுள்ளது.

தமிழ்ப் பெயர் தாங்கிவந்த வாகனங்கள் கல்லெறிகளுக்குட்படுவதுடன், எரித்து நாசப்படுத்தப்படுகின்றன.

வீதிகளில் உலாவும் தமிழர்கள் தாக்கப்படுவதால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. பலர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ் அனர்த்தத்தை சமாளிக்கும் வகையில் பாடசாலைகளும் தனியார் நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளையில் 1992 இல் காவிரி நீர்ப்பிரச்சினை தொடர்பாக கலவரம் மூண்டதையடுத்து பெங்களூரில் தமிழர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [உ]

## கலிபோனியாவின் வனப் பூங்காவில் தீ புகைமூட்டம் பரவியது !

(நியூயோர்க்)

கலிபோனியாவின் புகழ் பெற்ற தேசிய வனப் பூங்காவில் பெரும் காட்டுத் தீ பரவியுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இக் காட்டுத் தீ பரவிய காரணம் குறித்து இதுவரையில்அறிவிக்கப்படவில்லையாயினும் இத் தீயை அணைக்க ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீயணைப்புப் படையினர் போராடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காற்றினால் வெகுவேகமாகப் பரவியிருக்கும் இந்தத் தீ ஒரு வார காலமாக அந்த வனத்தைச் சூழ்ந்திருக்கிறது. இதைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கிறது. (து)

# ரயில் வண்டி குண்டுவைத்துதகர்ப்பு 12 பேர் பலி; பெருமளவினர் காயம்

[சென்னை]

இந்தியாவின் பிரிவினைவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் அஸ்ஸாம் மாநிலத்தில் பயணிகள் ரயிலைக் குண்டு வைத்துத் தகர்த்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 12 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதுடன் பெருமளவினர் காயமடைந்துள்ளனர்.

300 க்கும் மேற்பட்டோர் பயணம் செய்த இவ் வண்டியில் பெருமளவினர் இராணுவத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தின் சூத்திரதாரிகளை தேடிபொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [து]

## யூகோ. அதிபருக்கு எதிராகச் சதி தொடர்புடைய நால்வர் கைது

யுகோஸ்லாவிய அதிபருக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியவர்கள் என்ற குற்றத்தின் பேரில்டச்சுக்காரர் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோசோவோவில் உள்ள டச்சு அமைதிகாப்பு பணியாளருடன் இச்சதித்திட்டம் தொடர்பாக தொலைபேசியூடாக தொடர்பு கொள்கையில் சேர்பிய எல்லையில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வசமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

இதேசமயம்,

மேற்குலக இரகசிய சேவை அமைப்புகளுடன் தொடர்புடைய இவர்கள் பணத்திற்காக இவ்வாறன கொலை, கொள்ளை சதித்திட்டங்களில் ஈடுபட்டு வருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. )உ)

# மத்திய பிரதேச வீதி விபத்தில் 15 பேர் மரணம்; 20 பேர் படுகாயம்

(மும்பை)

மத்திய பிரதேசில் வீதி, விபத்தொன்றில் 15பேர் இறந்துள்ளனர். மேலும் 20 பேர் காயமடைந்துள்ளார்கள்.

ஆக்கிராம மும்பை வீதியில் உழவுஇயந்திரமும் லொறியும் நேருக்கு நேர்மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டது. இந்த லொறி சிம்பூரி, மாவட்டத்திலிருந்து சேயார் அருகேயுள்ள சீதள அம்மன் கோயிலுக்கு பக்தர்களை ஏற்றிச் சென்றகொண்டிருந்த போதே மேற்படி விபத்து இடம் பெற்றது.

## செய்திப்பரல்

★ சிங்கப்பூர் அரசு உடல் ஊனமுற்றோருக்கு கணனி வன்பொருள், மென் பொருள்களை இலவசமாக கொடுக்க இருப்பதாக அறிவித்துள்ளது.

★ இந்தோனேசிய அதிபரின் நெருங்கிய இராணுவத் தளபதி ஒருவர் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

★ இலண்டனில் உள்ள இரவு விடுதியொன்றில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதில் 9பேர் காயமடைந்தனர்.

★ பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குள் கள்ள நோட்டுகளை கடத்த முற்பட்ட ஐவர் குஜராத்தில்பிடிபட்டனர்.

★ பிஜியின் மகேந்திர சௌத்திரி அவுஸ்திரேலிய பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

★ கொலம்பிய மேற்குப்புற நகரமொன்றில் கம்யூனிஸ் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில்27 பொலிஸார் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [து[

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் டபிள்யு புஷ் சிற்கே வாய்ப்பு அதிகம்

### அரசியல் அவதானிகள் ஆரூடம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் தொடர்பாக முக்கிய மாநாடு ஒன்று ஏற்கனவே ஆரம்பமாகி தொர்ந்து இடம் பெற்று வருவதாகவும்.இம் மாநாட்டில் சுமார் 4 ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம் முறை குடியரசுக்கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதியின் மகன் டபிள்யு புஷ் போட்டியிட உள்ளதாகவும் ஜனநாயகக்கட்சி சார்பில்அல் யோர் போட்டியிடவுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

குடியரசுக்கட்சி வேட்பாளர். டபிள்யு புஷ் சிற்கே வெற்றிவாய்ப்புகள் அதிகமாக உள்ளதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-க)

## சீன மாஜி நாடாளுமன்ற உறுப்பினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

(பீஜிங்)

சீனாவில் நாடாளுமன்ற முன்னாள் மூத்த உறுப்பினர் செங்சோதிக்கு நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்துள்ளது.

சுமார் 50 இலட்சம் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகக் கேட்டு வாங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்தத் தண்டனை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் உயர்சட்டமன்றமான சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிரந்தர கமிட்டியின் துணைத்தலைவரான அவருக்கு பீஜிங்கின் முதல்தர மக்கள் நீதிமன்றம் இந்த மரண தண்டனையைவிதித்து அவரது சொத்துக்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை இவர் மேல் நீதிமன்றத்துக்கு முறைப்பாடு செய்ய 10நாள் அவகாசம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## அமெரிக்காவும் சீனாவும் மீண்டும் உயர் நிலை இராணுவத் தொடர்பு

[பீஜிங்]

சீனாவும் அமெரிக்காவும் உயர் நிலை இராணுவத் தொடர்புகளை மீண்டும் தொடக்குவதென்று முடிவு செய்திருக்கின்றன.

சென்ற மாதம் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் கோகல் சீனா சென்றிருந்தபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதையடுத்து அமெரிக்க கடற்படையின் பசுபிக்பகுதியின் அட்மிரல், சோல்மன் சல்கோ பீஜிங் போய் சேர்ந்திருக்கிறார். என்று தெரிவிக்கப்படுகிறது. [து]

## பி.ஜே.பியின் புதிய தலைவராக ரயில்வே துணை அமைச்சர் பதவி ஏற்பு

மத்திய ரயில்வே துணை அமைச்சர் பங்கார லக்ஷ்மன் பாரதிய ஜனதாகக் கட்சியின் புதிய தலைவராகிறார்.

ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதான பங்கார லக்ஷ்மன் பிரதம மந்திரி உட்பட கட்சித்தலைமையின் பொதுக்கருத்து அடிப்படையிலான வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

புதிய விதிமுறைகளின் படி புதிய தலைவர் 3 ஆண்டுகளுக்கு பதவிவகிப்பார்.

இதேவேளை தான் கட்சிக்கும் அரசுக்கும் விசுவாசமாக உழைக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். [து]

## ஹிமாலயப் பிரதேசத்தில் வெள்ளம் 25 பேரைக் காணவில்லை

ஹிமாலயப் பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் 25 பேர் அடித்துச் செல்லப்பட்டார்கள்.

சொத்துக்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திபேத்தில் எங்காவது தொடர்ந்து பலத்த மழை பெய்திருப்பதால் தான் இந்த திடீர் வெள்ளம் வந்திருக்கலாமென்று செய்தியாளர் தெரிவிக்கின்றனர்.

சட்லஸ் ஆற்றின் குறுக்கே இரண்டு பெரியபாலங்களும், சிறிய பாலங்களும் கரையோரக் குடிசைகளும் அடித்துச் செல்லப்பட்டன என்று சொல்லப்படுகிறன.

பாதிக்கப்பட்ட பகுதிகளை மாநில முதலமைச்சர் பிரேம் குமார் விமானம் மூலம் சுற்றிப் பார்வையிட்டார். (து)

உரம்மாருவறகு உள
வெறுக்கை ஃதில்லார்
மரம்மக்களாதலே வேறு

குறள்

# வலம்புரி

## கானலை நீரென்றெண்ணி

இலங்கை மிகவும் கடினமானதும் உணர்ச்சிக் கொந்தளிப்பு மிக்கதுமான சவால் ஒன்றை எதிர் கொண்டுள்ளது. இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ள பௌத்த பாரம்பரியம் சமாதான தீர்வு ஒன்றைக்காண்பதற்கு உதவி புரியும்.என திபெத் ஆன் மீகத் தலைவர் தலாய் லாமா கூறியுள்ளார். மத நம்பிக்கை மிகுந்தஆழமான உள்ளத்தின் உணர்வு ஊற்று அது இங்கோ வென்றால் நிலமைஎதிர்மாறானது மத வாதிகளின் மதம் பிடித்த உணர்வுகள் தான் அரசியல் பின்னடைவுகளுக்குக் காலாக அமைந்துவிடுகின்றன.

இந்த நாட்டின் அவலங்களுக்கு முடிவு காணப்பட வேண்டும் என்பது ஆத்மீகத் தலைவரின் கருத்து. அச்சமற்ற கருத்துப் பரிமாற்றங்கள் அவலங்களைப் போக்க உதவும் என்பதும் அவருடைய சிந்தனை.

தூரத்துப் பச்சையாய் நாட்டின் புத்தமதவாதிகள் அவருக்குத் தெரிகிறார்கள். உண்மைப் புலப்பாடு யாதெனில் அரசியலை ஒட்ட விடாது பிக்குமார் தனிமைப் படுத்தப்பட்டால் நாடு நிம்மதியடையும்.

மதத்தை- மதவாதிகளைப் பின்னணியாகக் கொண்டு ஆட்சிக்கதிரைகளைக் கைப்பற்றுபவர்கள் சுதந்திர சிந்தனை இழந்தவர்களாய்- காலத்துக்குக் காலம் தடுமாறும் பேச்சுடைய இரட்டை நாக்கர்களாய் இருக்கிறார்கள்.

அழுத்துப் போன- நலிந்து போன இனங்கள் எதிர் பார்த்த நிம்மதி கானல் நீராய், கனவாய் மாறி விட்டது.ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டாமா என்றுஆதங்கப்பட்ட மக்களுக்கு இலவம் பழம்பஞ்சாய்ப் பழுந்த கதைதான இனப்பிரச்சினைத் தீர்வு

பௌத்த குருமார்களின் துவேஷநாக்குகள்- அடங்கி ஒடுங்கும் வரை சுதந்திர நிம்மதி தலை காட்டாது அவர்களைப் பற்றி நிற்கின்ற பச்சோந்திகள் இருக்கும் வரை சமாதானப் பேச்சுக்கே இடமில்லை.

நாட்டிலே நல்லன நடக்க விடாதவர்கள் ஒருவகையில் சுதந்திர ஈழம் பிறக்க ஊக்கிகளாக இருக்கின்றனர் என்றே கருத வேண்டும். அமுக்கிய றப்பர் துண்டுகைகள் விலகும்போது மிக வேகமாகப் பறப்பது போல நியாயத்துக்குஅப்பாற்பட்ட சிந்தனைகளைச்சாகடித்து- வாழும் முறைமை தனைக் காணும் வழியில் வெகுநிதானமாகவும் வேகமாகவும் உந்தப்படுவார்கள் என்பதைப் புரியத்தான் போகிறார்கள். பொறுத்தார் பூமி-----

அன்புடன் ஆசிரியர்

# வைத்தியர்களுக்கு திடீர் இடமாற்றம்

# மன்னார் வைத்தியசாலை மூடப்படும்

(மன்னார்)

மன்னார் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய தென்பகுதிவைத்தியர்களுக்கு இடமாற்ற உத்தரவு வழ்ங்கப்பட்டதை அடுத்து அவ் வைத்தியசாலை மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

தென்பகுதியைச்சேர்ந்த 10 வைத்தியர்கள் கடந்த ஒரு வருடமாக அங்கு ஒப்பந்த அடிப்படையில்கடமையாற்றி வந்தனர்.

ஒப்பந்தகாலம் முடிவடைந்ததையடுத்து மேற்படி 10 வைத்தியர்களுக்கும் இடமாற்ற உத்தரவு வழங்கப் பட்டுள்ளது.

### நோயாளர் பெரும் இன்னல்

இதனையடுத்து அங்கு ஏற்பட்டுள்ள மருத்துவர் வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிக்கும்நடவடிக்கையினை இதுவரை மேற்கொள்ளாததால் வைத்தியசாலைப் பணிகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (உ)

## மாணவனை விடுவிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊரமு இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள செல்வராஜா மணிவண்ணன், குலசிங்கம் ஜெயசீலன், ராசலிங்கம் ஈழவேந்தன் ஆகியோரை யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி ஜீவேஸ்வரா நேரில் சென்று பார்வையிட்டார்.

இதேவேளை, ஊரமு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவரான செல்வராஜா மணிவண்ணனை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிக்கு மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளது. [உ-12)

## தாவடியில் திருட்டு

(கல்வயல்)

தாவடி வடக்குப்பகுதி வீடொன்றில், அண்மையில் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான நகை திருடப் பட்டுள்ளது. (உ-111

## யாழ். கோட்ட மட்டப் போட்டியில் சிறந்த தகமைகளைப் பெற்றோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

கடந்த மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில், நடைபெற்றயாழ் கோட்டமட்டத் தமிழ்த் தினப் போட்டி நிகழ்வுகளில் முதலாம், இரண்டாம்,மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின்பெயர் விபரங்களின் நேற்றைய தொடர்ச்சி கீழே தரப்படுகின்றன.

பிரிவு 2 இல் வாசிப்பு நிகழ்வில் ம பெனிற்றன் யாழ் புனித பரியோவான் கல்லூரி இ பெற்சிசாருண்யா யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சி ஞானகன் யாழ். மத்திய கல்லூரி,

ஆக்கத்திறன் வெளிப்பாடு கதை கூறல் நிகழ்வில் பே. கிறிஸ்ராசாளினி யாழ் கன்னியர் மடம்மகா வித்தியாலயம். டோ. கஜீப் யாழ். கொழும்புத்துறை சென்ஜோசப் வித்தியாலயம்.

கட்டுரைகள். கடிதம்வரைதல் நிகழ்வில் இ. சுபா யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி இ. துளசி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, ஞா. பிறிற் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி.

பேச்சு நிகழ்வில் எ. கிறிஸ்ரினாகிஷானி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி' ச. பிரதாஜினி யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, பா. சக்திநாதன் யாழ். புனித பரியோவான் கல்லூரி.

பாவோதல் நிகழ்வில் மெ. லதாங்கி யாழ்,வேம்படி மகளிர் கல்லூரி, ச சாருஜன் யாழ். புனித பரியோவான் கல்லூரி, அ. மேரிசெலின் யாழ். நாவாந்துறை றே. க. த. க. பாடசாலை.

நடன நிகழ்வில் கு. மயூரி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, சி, காயி யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

[தொடரும்] [சு]

## எழுதுவினைஞர் பதவி நேர்முகப் பரீட்சை கடிதங்கள் பெற்றவர்கள் தொடர்பு கொள்ளவும்

### யாழ். செயலகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் இடைத்தவர்கள் யாழ் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், சம்பந்தப் பட்டோர் தத்தமது பகுதி இராணுவ முகாம்களில் கப்பல் பயணத்திற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்து படையினரின் பயண அனுமதி விபரங்களுடன் யாழ். செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-3)

## தொற்றுநோய் பரவல்

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கு தாவடிப் பகுதியில் தொற்று நோய் பரவல் அதிகரித்து வருகின்றது.

அதிக வெப்ப நிலைகாரணமாக கொப்புளிப்பான், கண் நோய், காய்ச்சல், வயிற்றோட்டம், வாந்தி என்னும் பல நோய்கள் பரவுகின்றன.

3 நாள் வரை நீடிக்கும் காய்ச்சல், வாந்தி என்பவற்றால் பொதுமக்கள் பலர் மிகுந்தசிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

வைத்தியசாலைகளிலும் நோயாளர் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் இத் தொற்று நோயினால் பீடிக்கப்படுகின்றனர்.

சுகாதார சேவைப் பகுதி தொண்டர்கள் இது பற்றிய ஆய்வுகளை வீடு வீடாகச் சென்று மேற் கொண்டு வருகின்றார்கள் எனவும் தெரிய வருகின்றது. [த]

## மண்ணெண்ணெய் விநியோகம்

(துன்னாலை)

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் விவசாய சம்மேளனத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவசாய அட்டைக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

அத்துடன் தவணை முறையில் விநியோகிக்கப்படும் பெற்றோலும் வழங்கப்படுவதாகக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்தன. [த-41]

★ ✶

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு தலா 5 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் பாவனையாளர்களுக்கு வழங்கி வருகின்றது.

இதற்கு முன்னர் ப.நோ.கூ. சங்கம் பங்கீட்டு அட்டைக்கு தலா 2 லீற்றர் மண்ணெண்ணெயே வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (க-52)

## மட்டு மாவட்ட, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் போராட்டம் கைவிடப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த வகுப்பு புறக்கணிப்புப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

மேற்படி தொழிநுட்பக் கல்லூரி விரிவுரையாளரை, முன்னறிவிப்பேதுமின்றி கடமையிலிருந்த சமயம் பொலிஸார் கைது செய்தமையை எதிர்த்து கடந்த 19 ஆம் திகதியில் இருந்து வகுப்பு புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை தெரிந்ததே.

நேற்றில் இருந்து மாணவர்கள வழமைபோல் வகுப்புகளுக்குச் சமுகமளிப்பதாகவும்,விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கல்லூரி அதிபர் வி.குணரட்ணம தெரிவித்துள்ளார். [உ]

## பங்கீட்டு அட்டை மீளாய்வு

தாவடி தெற்கு யா/192 கிராம அலுவலர் பிரிவினுள் வசிப்போரின் உலர் உணவு அட்டைகள் மீளாய்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

விரைவில் இப்பகுதியில் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் உலர் உணவு அட்டைகளும் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென கிராம அலுவலர் ஈ.வி. விரபாகரன் தெரிவித்துள்ளார்.(த-11)

## அருள் பொழிந்திடும் கண்ணகி

வட்டூரின் தெக்கணப்பாய் பதியினிலே
வரங்கள் அளித்திடும் தாய்நீயே
வணங்குவோர் வாழ்வினில் உயர்வுகள்
வாரீயே வழங்கிடும் கண்ணகியே

இன்னல்கள் நிறைந்திடும் உலகினிலே
இனியவை பெருக்கிடும் தாய்நீயே
இணையிலாச் சங்குநிறை குளிப்பினிலே
இன்னருள் பொழிந்திடும் கண்ணகியே.

[வட்டு. கண்ணகி அம்பாள் ஆலய ஆடிப்பூர சங்காபிஷேகத்தை முன்னிட்டு இன்று இக்கவிதை பிரசுரமாகின்றது);

சி. சிவா
வட்டுக்கோட்டை

## ஆடிப்பூரத்தில் அம்பாளைத் தரிசித்து அவள் அருளாசி பெற்றுய்வோம்



சிவனுக்குத் திருவாதிரையும், விஷ்ணுவிற்கு திருவோணமும், முருகனுக்கு விசாகமும் மிகச் சிறந்த நட்சத்திரங்களாகக் கொளளப்படுவது போல் அம்பிகைக்கு பூரம் சிறந்த நட்சத்திரமாகக் கொள்ளப்படுகின்றது.

ஒவ்வொரு மாதத்திலும்பூர நட்சத்திரம் வருகின்றதாயினும் ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தையே சிறப்பாக இந்துக்கள் கொண்டாடுகின்றனர். இந் நாளிலேயே அம்பிகை திருஅவதாரம் செய்தருளினார் எனப் பெரியோர்கள் கூறுவர்.

ஸ்ரீ தேவி பூதேவிகளின் அம்சமாகக் கருதப் பெறும் ஆண்டாள். நாச்சியாரும் ஆடிப்பூரத்திலேயே அவதரித்தார். என்பது வரலாறு.

ஆதலால் ஆடிப்பூர நாளில் அருளே வடிவமாக உடையவளும் உலக அன்னையும் ஆகிய அம்பிகையை அன்புடனும் பக்தியுடனும் வழிபட்டுப் போற்றி வணங்குபவர்கள் எல்லா நலன்களையும் பெற்று மகிழ்வார்கள்.

இந் நாளில் சில உழவர்கள் வயல் விதைப்பிலும் ஈடுபடுவார்கள்.

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரத் தினத்தைப் பூர்த்தி தினமாக வைத்துப் பத்து நாட்கள் இலட்சர்ச்சனையும் ஸ்ரீ சக்கர பூஜையும் நடைபெறுகின்றது.

### லதா

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூரத்தை இறுதிநாளாக வைத்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது, இங்கு தினமும் விசேட பூஜையும் அபிஷேகமும் இடம் பெறுகின்றது.

ஆடிப்பூரம் அம்பாள் பக்குவமடைந்த தினமாக நினைத்து அன்றைய தினம் குமாரி பூஜை, சுவாஷினிப் பூஜை என்பன நடைபெறுகின்றது.

மகத்துவம் நிறைந்த இந் நாளில் நாமும் அம்பிகையை வணங்கி அவள் அருளைப் பெற்றுய்வோமாக.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வவுனியாவில் காணாமற்போன இருவர் படைமுகாமில் தடுத்து வைப்பு

(வவுனியா)

கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் வவுனியாவில் காணாமல் போன இருவரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வவுனியா செயலகத்தில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கருணானந்ததாஸ் ஞானச்சந்திரன் (வயது-29) என்பவரும் சந்திரசேகரம் சூரியகுமார் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (வ)

# அல்வாயில் கோஷ்டி மோதல் கத்திவெட்டில் மூவர் காயம்

(புலோலி)

அல்வாய்ப்பகுதியில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட சண்டையில் மூவர் கத்தி வெட்டுக் காயங்களுடனும் ஒருவர் கல்லெறிக்காயங்களுடன் மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றும் நேற்று முன்தினமும் ஏற்பட்ட சண்டையின் போது, சந்தன் சின்னத்துரை (வயது 46), பழனிப்பிள்ளை மனோன்மணி (வயது 44), தியாகராஜா ஜெயந்தன் (வயது 19), எஸ். இராசேந்திரம் (வயது 39) ஆகியோரே காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீண்டகாலமாக நிலவி வந்த பகையே கத்திவெட்டில் முடிந்ததாகத் தெரிய வருகிறது. (ந-7-52)

# தேர்தல் குற்றச்சாட்டு மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

(கொழும்பு)

கடந்த தேர்தலின் போது மேல் மாகாணத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட காமினி ஜயவிக்கிரம பெரேராவின் தேர்தல் பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட தடைகாரணமாக தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முதன்மை வேட்பாளரான எஸ்.பி. நாவின்ன லக்யும பத்திரிகைக்கு அளித்த பேட்டி காரணமாகவே பிரச்சாரத்திற்கு தடை ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம் போதியளவு சாட்சிகள் இல்லையெனக் கூறி மனுவை நிராகரித்தது. (ந)

### இலங்கை...

பற்றிக் கலந்துரையாடிய போதே ஜெனரல் அசோக் மேத்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையின் இனப்பிரச்சினையானது பிராந்திய பிரச்சினை என்ற நிலையைக் கடந்து சர்வதேச பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (வ)

### தீர்வுத்திட்டத்...

னால் அளிக்க முடியும் இரண்டு வாக்கு அளிக்க முடியுமானால் அதனையும் அளித்து எனது ஆதரவை வழங்குவேன் என்று நகைச்சுவையாக கூறினார்.

பிரதமர் சிறிமாவோ பண்

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் நாளைக் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் டி. எம். ஐ. கல்வி நிலையத்தில் அவசர கலந்துரையாடலுக்காக ஒன்று கூடுமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (ந-2)

### உத்தேச...

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளரும் எம்.பியுமான இரா. சம்பந்தன், ஈ. பி. டி. பியின் எம். பி. எஸ். தவராசா, புளொட் அமைப்

# தீர்வுத் திட்டத்தை எதிர்த்து 1500 புத்தபிக்குகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நாளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கஇருக்கும் அரசியல் அமைப்பு சீர்திருத்த நகல் மசோதாவை எதிர்த்து பௌத்த சிங்கள பேரினவாதிகள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும், மாநாடு ஒன்றையும் நடத்தினர்.

சுமார் 1500 பிக்குகளினால் நடத்தப்பட்ட இவ்வூர்வலம் மகாசபவில் ஆரம்பமாகி தேசிய இளைஞர் சேவை மன்றம் வரை நடைபெற்றது.

நேற்று மாலை மூன்று மணிக்கு ஆரம்பமான இவ் ஊர்வலம் மாலை 6 மணிக்கு நடைபெற்ற மகாநாட்டுடன் முடிந்தது.

இம் மகாநாட்டில் மல்வத்த அஸ்கிரிய அமரபுரபீடாதிபதிகள் கலந்து கொண்டனர்.

சிங்கள மக்களுக்கு தெரிவிக்காத இந்த அரசியலமைப்புச் சீர்திருத்த மசோதாவை தாம் முற்றாக நிராகரித்து எமது எதிர்ப்பை அரசிற்கு தெரிவிக்க வேண்டும்.

இவ் அரசியல் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள சிங்கள இன மக்கள் மத்தியில் பிளவு ஏற்படுவதுடன் தமிழ் முஸ்லிம் மக்களிடையேயும் பிளவு ஏற்படுவதை தடுக்க வேண்டுமென்றும் பீடாதிபதி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார். (வ)

### பாராளுமன்றத்தின்..

நாளை காலை 9.30 மணிக்கு பாராளுமன்றத்தின் முன் நடத்தப்பட இருக்கும் இவ் ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளான புத்த பிக்குகளும் கலந்துகொள்ள இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சமயம் புத்தபிக்குகள் வாயைக் கட்டி உண்ணாவிரதம் இருந்த பாணியில் புத்த பிக்குகள் உண்ணாவிரதம் இருப்பர் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

### தீர்வு..

இவ் ஆர்ப்பாட்ட பேரணியில் சுமார் 2000 பேர் வரை கலந்து கொண்டனர்.

இவ் ஊர்வலத்திற்கு மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா தலைமை தாங்கினார்.

அரசை ஆதரிக்கும் சுலோகங்களைத் தாங்கியும், கோஷமிட்டும் ஊர்வலத்தில் சென்றனர்.

இவ் ஊர்வலத்தில் அமைச்சர்கள் இங்ஸ்லி விக்கிரமரத்தின, எஸ். பி. திசநாயக்கா, பிரதி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, எம். பிக்களான டிலான் பெரேரா, எதிரி பிரேமரத்தின ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

### அரசும்...

எம். பி. டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் கட்சியின் தவிசாளர் கருஜெயசூரியா தலைமை

# நாஞ்சில் மனோகரன் நேற்றுக் காலமானார்

(சென்னை)

தமிழக வருவாய்த்துறை அமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளருமான நாஞ்சில் மனோகரன் (வயது 71) நேற்றுக் காலை மாரடைப்பில் காலமானார்.

சென்னை புரைசைவாக்கம் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடலுக்கு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, சென்னை மாநகர மேஜர் மு.க.ஸ்ராலின், ஜீ. கே மூப்பனார், வை. கோபாலசாமி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

1957 ஆம் ஆண்டு தி.மு.க.வின் சார்பில் நாகபட்டினம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த பின்னர் 1962, 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் சட்ட சபைத் தேர்தலில் வெற்றிபெற்றார்.

அ தி மு.க வில் 1972 ஆம் ஆண்டு இணைந்து 1977 இல் நிதி அமைச்சராக இருந்தார்.

அமைச்சரின் பூதவுடல் இன்று காலை 9.30 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஓசேரி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. (ந-2

### பிக்குமார்...

அகதிகள் முகாமிற்கும் விஜயம் செய்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் தென்னிலங்கையில் இருந்து சேகரித்து வந்த உலர் உணவு மற்றும் உடுபுடவைகளையும் வழங்கி தென்னிலங்கையின் நட்புறவை எடுத்துக்காட்டியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை தோணிக்கல் திரையரங்கில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது போல் எதிர்காலத்தில் இடம் பெற இடமளிக்கக் கூடாது என்றும் புத்த பிக்குமார் குழு கேட்டுக்கொண்டுள்ளது. (வ)

### உயர்நீதிமன்ற......

யில், 24மணிநேரத்துக்குள், உயர் நீதிமன்றம் இது தொடர்பாக ஆராய்வது அவசியமாகும்.

இந்த அரசியல் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி துணிச்சலுடன் சமர்ப்பிப்பதின் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயலும் ஒரே ஒரு அரசியல்

### சிங்கள...

கையில் சிங்கள மக்களைப் பாதிக்கும் இத்தீர்வுத் திட்டத்தை அமைச்சர்கள், எம். பிக்கள் அனைவரும் பாராளுமன்றத்தில் எதிர்க்க வேண்டுமெனவும் கோரிக்கைவிடுத்துள்ளார். (வ)

### பயணிகள்...

கடந்தவாரம் பயணச்சீட்டுபெறாத ''சி'' இலக்கமுடைய 100 பயணிகளுக்கும், மற்றும் திருமணவைபவம், பாடசாலை லீவுக்குச் செல்லும் ஆசிரியர்கள் என 75 பயணிகளுக்கும், படையினரால் முன்னுரிமை பெற்ற 50 பயணிகளுக்கும், மற்றும், மதகுருமார்கள், அவசர பயணம் மேற்கொள்ள

னால் அளிக்க முடியும் இரண்டு வாக்கு அளிக்க முடியுமானால் அதனையும் அளித்து எனது ஆதரவை வழங்குவேன் என்று நகைச்சுவையாக கூறினார்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது உடல் நலக் குறைவையும் பொருட்படுத்தாது மகளின் முயற்சிக்கு ஆதரவு வழங்குவதற்காக நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்திற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

உத்தேச...

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளரும் எம். பியுமான இரா: சம்பந்தன், ஈ. பி. டி. பியின் எம். பி. எஸ். தவராசா, புளொட் அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம். பியுமான தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் தமக்கு தீர்வுத்திட்ட நகல் வரைவு இன்னமும் கிடைக்கவில்லை என வலம்புரிக்குத் தெரிவித்தனர். (வ)


கிருஷ்ணா

தொலைத் தொடர்பு நிலையம்

குறைந்த கட்டணத்தில் விரைவாக

உள்நாட்டு, வெளிநாட்டு

தொலைத் தொடர்பு சேவையினைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்;

கிருஷ்ணா

தொலைத் தொடர்பு நிலையம்

தொலைபேசி இலக்கங்கள்: —

021 - 2509
021 - 2806
021 - 2981

இல. 87,
பெரியகடை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


அரசும்...

எம். பி. டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் கட்சியின் தவிசாளர் கருஜெயசூரியா தலைமையில் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோரளை, எம்.பிக்களான எம். எச்.முகமது, கே. என். சொக்ஸி, மகிந்த சமரசிங்க, டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற குழுவும் செயற் குழுவும் நாளை பாராளுமன்ற கட்டடத்தில் ரணில்விக்கிரமசிங்க தலைமையில் கூடி தீர்வுத் திட்டம் தொடர்பாக ஆராய உள்ளது. [வ]

விமானப்...

இருந்து கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு ரஷ்யாவில் இருந்து இரண்டு எம். ஐ. உலங்குவானூர்திகளும் இந்த வாரம் கொழும்பு வர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படைக்கும் தாக்குதல் விமானங்களும், வேவு வானூர்திகளும் கொள்வனவு செய்யப்பட்டு கடற்படை விமான அணி ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

விமான கொள்வனவுகளை அடுத்து வடக்கு யுத்த முனையில் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ந-7)

மூலத்தை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி துணிச்சலுடன் சமர்ப்பிப்பதின் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயலும் ஒரே ஒரு அரசியல் தலைவி சந்திரிகாவென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்ட வரைபில் காணப்படும் முக்கிய அம்சங்கள்:-

⚔ அரசின் தன்மை ஒற்றையாட்சியின் கீழ் 'நடுவன்' அரசு என்ற பதம் பாவிக்கப்பட்டுள்ளது.

⚔ நியாயமற்ற முறையில் மத்திய அரசினால் பெறப்பட்ட காணிகளை கேட்டுப் பெறக்கூடிய வாய்பும்; அதனை மறுக்கும் பட்சத்தில் காணி அதிகாரம் உடைய சபையில் முறையிடும் வசதியும்

⚔ வடக்குக் கிழக்கு இணைப்பு 10 வருடங்களுக்கு தொடரும் அதன் பின்னர் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதில் தோல்வி கண்டால் வடக்கும் கிழக்கும் தானாகவே பிரியும்

இவையே அரசியல் அமைப்புச் சீர்திருத்த வரைபில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்களாகும். [வ]

கும், மற்றும் திருமணவைபவம், பாடசாலை லீவுக்குச் செல்லும் ஆசிரியர்கள் என 75 பயணிகளுக்கும், படையினரால் முன்னுரிமை பெற்ற 50 பயணிகளுக்கும், மற்றும், மதகுருமார்கள், அவசர பயணம் மேற்கொள்ள உள்ளவர்கள், மரணநிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளவர்களென 25 பயணிகளுக்கும் பயணச்சீட்டு வழங்கப்படவுள்ளது பயணிகள்கப்பல் வெள்ளிக்கிழமை திருமலையில் இருந்து புறப்பட்டு சனிக்கிழமை பருத்தித்துறை வந்தடையவுள்ளது.

இம்மாதம் முதல் வாரத்தில் இரண்டு தடவைகள் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)


கஜன்

திரை

ஊர்காவற்றுறை

கார்த்திக் கௌசல்யா

நடித்த

குபேரன்

காட்சி நேரம்

பி.ப 3.30 மணி

(கி/652)



இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்; எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.